OS 112/2023

பி.வா.சா.3 கோவிந்தராஜ் த/பெ குணசேகரன்

நாள் 11.02.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பிரதிவாதி பிச்சை எனக்கு 14.08.2013ம் தேதி அடமானப்பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். எந்த எந்த சர்வே எண் சொத்துகளுக்கு அடமான பத்திரம் எழுதி கொடுத்தார் என்று சொல்ல முடியுமா என்றால் மொரப்பந்தாங்கல் சொத்து ஆகும் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியாது. அடமானப்பத்திரம் எழுதுவதற்கு முன்பு மூல ஆவணங்களை பார்த்தேன் என்றால் பிரதிவாதி பெயரில் இருந்த செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பட்டாவை பார்த்தேன். எனது முதன்மை வாக்குமூலத்தில் தான செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் பட்டாவை நேரில் பார்த்ததாக விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பத்திரங்களை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணத்தை கொடுத்து 06.04.2023 அடமானக்கடனை பைசல் செய்துவிட்டார் என்றால் சரிதான்.